**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 64/2021**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.09.2025 | கணவர் பெயர்: | ராஜசேகரன் |
| பெயர்: | மைதிலி<br>(PW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | பெரம்பூர் | சமயம்: | |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 40/2025 |

**5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 25.09.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.24)**

1. இந்திரேசன் எனது தகப்பனார் ஆவார். 1ம் பிரதிவாதி கலியம்மாள் எனது தாயார். நான் பெரம்பூர், மெயின்ரோடு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி 14 வருடங்கள் ஆகிறது. 1ம் வாதி எனது மூத்த சகோதரி ஆவார். 1ம் வாதி திருமணம் நடைபெற்று கும்பகோணத்தில் வசித்து வருகிறார். அவருக்கு திருமணமாகி சுமார் 30 வருடங்கள் இருக்கும். 2 மற்றும் 3 பிரதிவாதிகளான பிரகாஷ், செந்தில் ஆகியோர் எனது சகோதரர்கள். செந்தில் பெரம்பூர் மெயின்ரோடு என்ற முகவரியில் வசித்து வருகிறார்.

2. பிரகாஷ் பூங்குடி ரோடு, பெரம்பூர் என்ற முகவரியில் மாடி வீட்டில் வசித்து வருகிறார். 4ம் பிரதிவாதியான கோமதி எனது மூத்த சகோதரி ஆவார். அவருக்கு சுமார் 17 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்று கும்பகோணத்தில் வசித்து வருகிறார். எனது வீடு, ஜெயந்தி வீடு, கோமதி வீடு மூன்றுமே மாடி வீடுகள் என்றால் சரிதான். தாவா சொத்து ஆலடியம்மன் கோயில் தெரு (எ) கீழத் தெரு, பெரம்பூர் என்ற முகவரியில் உள்ளது. தாவா

சொத்து என்பது கிழ–மேல் 18 அடி அகலமும் தென்–வடல் 200 அடி நீளமும் கொண்ட மனைகட்டு என்றால் சரிதான்.

3. 5ம் பிரதிவாதி கமலாவும், 7ம் பிரதிவாதி தினேஷீம் தாவா சொத்திலுள்ள வீட்டை இடித்த பிறகு அதிலுள்ள காலி மனையின் முன்புறத்தில் தகர ஷீட்டு போடப்பட்ட வீட்டில் குடியிருந்து வருகின்றனர் என்றால் சரிதான். அந்த வீடு சுமார் 9 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான், நீளம் சுமார் 20 அடி இருக்கும் என்றால் சரிதான். 1, 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை விட்டுவிட்டு வேறு இடத்திற்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்பு சென்றுவிட்டனர் என்றால் சரிதான். தகர ஷீட் போட்ட வீட்டை தவிர தாவா சொத்தின் மனைகட்டு என்பது காலியிடமாக, கவனிப்பாரற்று கிடக்கிறது என்றால் சரிதான்.

4. அனைவரும் காலி செய்து சென்றுவிட்ட பிறகும் 5ம் பிரதிவாதி கமலாவின் குடும்பம் தாவா சொத்தில் ஏற்கனவேயிருந்த ஓட்டு வீட்டில் குடியிருந்து வந்தனர் என்றால் சரிதான். வீடு முழுமையாக இடிக்கப்பட்டு தரைமட்டமானது என்பது 2020ம் வருடம் இருக்கும். ஏற்கனவே இருந்த ஓட்டு வீடு கிழ–மேல் 15 அடி அகலமும் தென் –வடல் 35 அடி நீளமும் இருக்கும் என்றால் சரிதான். எனது தாயார் மற்றும் சகோதரர்கள் ஏற்கனவே இருந்த ஓட்டு வீட்டிற்கு எப்போதுவரை வீட்டு வரி கட்டினார்கள் என்றால் வீடு இருக்கும் வரையில் கட்டியிருந்தார்கள்.

5. வீட்டு வரி ரசீது ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கானது இந்திரேசனுக்கு ¼ பாகமும், 8ம் பிரதிவாதி கண்ணையனுக்கு ¼ பாகமும், நவநீதத்தம்மாள் வகையறாவிற்கு ½ பாகமும் கிடைக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நவநீதத்தம்மாளின் வாரிசுகள்தான் கமலா, ருக்மணி, சுலோச்சனா, பேபி ஆகியோர்கள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி கமலாவின் மகன் தான் 7ம் பிரதிவாதி தினேஷ் என்றால் சரிதான்.

6. கமலாவின் மகள்கள் வினோபா, ராதிகா என்றால் சரிதான். இந்த

வழக்கில் வினோபா, ராதிகாவை பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வினோபா, ராதிகா அவசியத்தரப்பினர் என்பதால் அவர்களை சேர்க்காத காரணத்தால் இந்த வழக்கு குறையுடையது என்றால் சரியல்ல. மொத்த சொத்தில் இந்திரேசனுக்கு உரிய ¼ பாகத்தில் நானும் 1ம் வாதியும் 2/6 பாகம் கோருகிறோம் என்றால் சரிதான்.

7. நாங்கள் 996 சதுரடியில் 2/6 பாகம் கோருகிறோம் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி கண்ணையன் கடந்த 10 வருடங்களாக மெயின்ரோடு, பெரம்பூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார்.

5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்–12.52)**